2003 ஏப்ரல் 21] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11-30

தமிழக அரசு, 24-12-2002 அன்று வெளியிட்டுள்ள அரசாணை எண் 1262, உள் துறை, காவல் 7-ன்படி தமிழ்நாடு முழுவதும், பொடா சட்டம், பிரிவு 4-ன்கீழ் அறிவிக்கப்பட்ட பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே உரிமம் இல்லாத நாட்டுக் கைத்துப்பாக்கி, 2 தோட்டாக்கள் மற்றும் தமிழ்நாடு விடுதலைப் படை இயக்கத்தின் பிரசுரங்கள் வைத்திருப்பது பொடா சட்டம் பிரிவு 4(ஏ)-ன்படி குற்றமாகும். இந்தக் காரணங்களினால், பொடா சட்டம் 2002 பிரிவு 4(ஏ)-ன் கீழ் வழக்கு, பூந்தமல்லியில் பொடா சட்டத்திற்காக நிறுவப்பட்டுள்ள தனி நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. 16-4-2003 அன்று கூடுதல் பெருநகரக் குற்றவியல் நடுவர், எழும்பூர் அவர்கள் இந்த வழக்கை பூந்தமல்லியில் உள்ள பொடா நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவு பிறப்பித்தார். அதன்பேரில் பொடா நீதிமன்றம் எதிரியை ஆஜர் செய்ய 18-4-2003 அன்று உத்தரவு பிறப்பித்து அது எதிரிக்கு serve செய்யப்பட்டுள்ளது. இதற்கிடையில், எதிரி ஆர்.ஆர்.கோபால், ராஜாமணி கொலை வழக்கு தொடர்பாக 17-4-2003 அன்று கோபிசெட்டிப்பாளையம் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 15 நாள் நீதிமன்றக் காவல் பெற்று, சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. வேல் முருகன் அவர்கள் இருக்கையில் இல்லாத காரணத்தால் தள்ளிவைக்கப்படுகிறது.

## 3. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கான கணினி பயிற்சி திட்டத் தொடக்க விழா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கணினிப் பயிற்சி திட்டத் தொடக்க விழா, தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் இன்று (21-4-2003) மாலை 4-00 மணியளவில் சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் 10-வது தளத்தில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு

சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மாலை 3½ மணியளவில் இருக்கையில் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் இவ்விழாவில் கலந்துகொள்வதற்கு ஏதுவாக, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலிருந்து பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிமுக நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எதிர்க்கிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**திரு.சி.ஞானசேகரன்:** நாங்களும் அறிமுக நிலையிலேயே இதை எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.